Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.840/2022

**Depositions of PW- 3**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.ரமேஷ் | Occupation | வனக்காப்பாளர் |
| Father's name | ராசையா | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of September 2025.

<u>24.09.2025</u>

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது ராஜபாளையம் வனச்சரகத்தில் வனக்காப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.03.2020 ம் தேதி திருவில்லிபுத்தூர் வனச்சரகத்தில் வனக்காப்பாளராக பணியிலிருந்தபோது வனச்சரக அலுவலகத்திற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் வனவர் தலைமையில் புதுப்பட்டி பிரிவு வனவர் ஆசிஸ் தலைமையில் நானும், குன்னூர் பீட் வனக்காப்பாளர் சாந்தா, ரெங்கர் தீர்த்தம் வனக்காப்பாளர் பெரியசாமி, குன்னூர் பீட் மிகை பணியிட காவலர் முத்தையா, ஆகியோர் சேர்ந்து குன்னூர் பீட் கணவாய் சரக பகுதியில் ரோந்து செய்து வந்தபோது வனத்துறையினரை கண்டு புதரில் மறைந்திருந்த நபர் தப்பியோடியபோது நாங்கள் சுற்றிவளைத்து பிடித்து விசாரணை செய்தபோது தனது பெயர் கார்த்திக்ராஜா த/பெ.முனியாண்டி, செம்பட்டையான்காலனி சமத்துவபுரம் என்று கூறினார். பின்னர் மேல்விசாரணை செய்ததில் வனவிலங்கு பாதையில் வனவிலங்குகளை வேட்டையாடும் நோக்கில் மீன்பிடி வலைகளை கட்டி வைத்து புதரில் மறைந்து வனவிலங்குகள் வருவதை கண்காணித்து வருவதாக கூறினார். வனவிலங்குகள் மீன்பிடி வலையில் மாட்டினால் வனவிலங்குகளை வெட்டி எடுத்துச் செல்வதற்காக புதரில் மறைத்து வைத்திருந்த Hero Passiion pro கருப்பு கலர் TN84 Z 6890 என்ற

இருசக்கர வாகனத்தையும், இரும்பு பிடியுடன் கூடிய கத்தியையும், மர பிடியுடன் கூடிய கத்தியையும், மகா சிமெண்ட் என்று எழுதப்பட்ட பை ஒன்றையும், அல்ட்ரா சூப்பர் சிமெண்ட் என்று எழுதப்பட்ட பை இரண்டும், கைப்பற்றி ஸ்தல மகஜர் தயார் செய்யப்பட்டது. ஸ்தல மகஜரில் நானும் கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் ஸ்தல மகஜரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். பின்னர் எதிரி கார்த்திக்ராஜா கொடுத்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் என்னால் தயார் செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் எதிரி கொடுத்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். பின்னர் எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட பிடி பொருட்களை வன அலுவலர் கைப்பற்றி வனச்சரக அலுவலகத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்னர் எதிரி மீது வழக்கு பதிவு செய்வதற்கு வனச்சரக அலுவலருக்கு உதவியாக இருந்தேன். இது சம்மந்தமாக வனச்சரக அலுவலர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.